සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(II)

காலம் - 03 மணித்தியாலங்கள்

## அடிப்படை பேரினப் பொருளியல் (22)

විභාග අංකය
Index No / சுட்டெண் ....................................

- **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

---

1) I. அ) அரசிறைக் கொள்கை (Fiscal Policy) மற்றும் நாணயக் கொள்கை (Monetary Policy) என்பவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ) இந்தக் கொள்கைப் பகுப்பாய்வு தொடர்பிலான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள அரச நிறுவனம் யாது? (02 புள்ளிகள்)

இ) பிரதான அரச வருமான மூலங்கள் இரண்டையும் அரச செலவின வகைகள் இரண்டையும் குறித்துரைக்க. (04 புள்ளிகள்)

II. "குறிப்பிடத்தக்க காலமாக முன்னேற்றத்தை அடையாத பொருளாதாரத்தில் தூண்டுதலை ஏற்படுத்தும் முகமாக 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசிறைக் கொள்கை மூலம் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. எனினும் கோவிட் - 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, ஒட்டுமொத்த அரசாங்க நிதிச் செயலாற்றுகையினதும் எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகளின் இடப்பெயர்வுக்கு ஏதுவாக அமைந்தது. இந்த இடப்பெயர்வு, அரசாங்க வருமான வீழ்ச்சி மற்றும் அரசாங்க மீண்டுவரும் செலவினங்கள் அதிகரித்தல் போன்ற காரணிகளினால் ஏற்பட்ட வரவுசெலவுப் பற்றாக்குறை அதிகரிப்பு மற்றும் மத்திய அரசாங்கதின் தீர்க்கப்படாத கடன்கள் அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது"

***(ஆண்டறிக்கை 2020, இலங்கை மத்திய வங்கி)***

அ) மேலுள்ள கூற்றுக்கு கவனத்தைச் செலுத்தி 2020 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானம் வீழ்ச்சியடைவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் மற்றும் அரசாங்கத்தின் மீண்டுவரும் செலவினங்கள் அதிகரித்தமைக்கான காரணங்களையும் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

ஆ) "ஆரம்ப மிகை" மற்றும் "வரவுசெலவு பற்றாக்குறை" என்பவற்றை விளக்கி அவற்றுக்கிடையிலுள்ள தொடர்பை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் 25)

2) i. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. இலங்கை கைத்தொழில் துறையின் பொருளாதார செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு கடைப்பிடிக்க முடியுமான மூலோபாயங்களை விமர்சன ரீதியில் விபரிக்க. (15 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 25)

3) i. நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் பணவீக்கம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்பை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏனைய விலைச் சுட்டிகள் யாவை? (05 புள்ளிகள்)

iii. 2021 வருடத்தில் பணவீக்கத்தின் போக்கை குறிப்பிட்டு இலங்கையில் பணவீக்கத்திற்கு தாக்கம் செலுத்திய காரணிகளை விபரிக்க. (புள்ளிகள் 2x5=10)

(மொத்தப் புள்ளிகள் 25)

4) "வரவுசெலவுப் பற்றாக்குறை" 2022 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 8.8 வீதம் வரையிலும், 2024 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 6.1 வீதம் வரையிலும், 2025 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 4.8 வீதம் வரையிலும் குறைப்பதற்கு நாம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம். அதே போன்று நாம் 2028 ஆம் ஆண்டில் சமநிலையான வரவுசெலவுத் திட்டமொன்றை எதிர்ப்பார்க்கின்றோம். வரவுசெலவுப் பற்றாக்குறையை குறைப்பதற்கு திடமான செலவு முகாமைத்துவ முறையைப் பின்பற்றுதல், அரசாங்க வருமானத்தை அதிகரித்தல் மற்றும் நட்டத்தில் இயங்கும் அரசாங்க தொழில் முயற்சிகளை மீள்கட்டமைத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும்."

***(நிதி அமைச்சரின் உரை 2022)***

I. பின்வரும் படிமுறைகளின் கீழ் வரவுசெலவு பற்றாக்குறையை குறைப்பதற்குத் தேவையான மூலோபாயங்களை விபரிக்க.
   1) திடமான செலவு முகாமைத்துவம்
   2) அரசாங்க வருமானத்தை அதிகரித்தல்
   3) நட்டத்தில் இயங்கும் அரசாங்க தொழில் முயற்சிகளை மீள்கட்டமைத்தல் (புள்ளிகள் 5x3=15)

II. அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அரசாங்க தொழில் முயற்சிகளை மீள்கட்டமைப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்மொழிக. (10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 25)

************